YISHUN SECONDARY SCHOOL
Subject :Tamil (1157)
Level & Stream: Sec 2 Express

| The Curriculum and Approaches to Learning | | Key Programmes / Competitions |
|---|---|---|
| கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் அடிப்படைத் திறன்களான ஆறு திறன்களையும் பெறுவதற்காக ஈசூன் உயர்நிலைப் பள்ளி, தமிழ்மொழிக் கற்பித்தலில் பல்வேறு உத்திகளையும், கற்றல் பயிற்று வளங்களையும், ஊடகங்களையும் மாணவர்களின் வயது மற்றும் அனுபவத்திற்கேற்ப வழங்கி மகிழ்வூட்டும் கற்றலை வழங்கி வருகிறது. மாணவர்களின் ஆர்வ நிலையைத் தூண்டவும் அவர்களின் ஆற்றலை வளப்படுத்தவும் த்தபது கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பற்றிய தகவல்களைத் தகவல் தொழில்நுட்பத்தோடு இணைந்து தமிழ்மொழி கற்றுக் கொடுக்கப்படுகிறது. | | பொங்கல் விழா, இரு வார தமிழ்மொழி விழா \ சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகப் போட்டிகள், தமிழ்மொழி மாதப் போட்டிகள் |
| **Term / Week** | **Learning Experiences (chapter, activity)** | **Learning Outcomes & Assessment** |
| 1 | **<u>படித்தல்:</u>**<br><br>எது நட்பு?, வரலாற்றில் நிற்கும் உன்னத நட்பு, நட்பு தினம், நினைவலைகள், புத்துணர்ச்சி அளிக்கும் பொழுதுபோக்கு, அச்சுப் படைப்புகள், ஞாபகம் வருதே ஆகிய தலைப்புகளில் 2A தொகுதி 1 மற்றும் 2இல் அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br><br>சுருக்கி வரைதல் பயிற்சியில் ஈடுபடுவர்.<br><br>ஒளிக்காட்சி பதிவு தயாரிப்பர், சிறுகதைக் கூறுகளை நினைவுகூர்ந்து எண்ணங்கள் நிலையானவை அல்ல என்ற சிறுகதையைத் திறனாய்வர். பொழுதுபோக்கில் நாங்கள் பெற்ற | **<u>நோக்கங்கள்:</u>**<br><br>பனுவலில் இடம்பெறும் தகவலுக்கு ஏற்றவாறு உணர்வுகளை வெளிப்படுத்திப் படிப்பர். லகர, ளகர, ழகர வேறுபாட்டை உணர்ந்து முறையாக அவ்வெழுத்துகளை உச்சரிப்பர்.<br><br>பனுவலில் கூறப்பட்டுள்ள கருத்துகளைப் புரிந்துகொண்டு கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமாக விடையளிப்பர்.<br><br>நாளேட்டுச் செய்திப் பனுவலை உருவாக்கும் திறனைப் பெறுவர். நாளேட்டில் இடம்பெற்றிருக்கும் |

<table>
<tr><td></td><td>பயன்கள் என்ற தலைப்பில் நாளேட்டுச் செய்தியை எழுதுவர்.<br><br><u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u><br><br>ஒருவர் பொறை இருவர் நட்பு, பொழுதுபோக்குகள் பலவிதம் ஆகிய பகுதிகளைக் கேட்பர்.<br><br><u>இலக்கணம்:</u><br><br>- இயல்புப் புணர்ச்சி<br>- விகாரப் புணர்ச்சி<br>- முற்றியலுகரம்<br>- குற்றியலுகரம்<br>- எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி<br>- திசைப்பெயர்ப் புணர்ச்சி<br><br><u>இலக்கியம்:</u><br><br>கவிதையைப்பற்றியும், மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரண்டைப்பற்றியும் அறிவர்.<br><br>மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழி, திருக்குறள்</td><td>பல்வேறு கூறுகளைப்பற்றி அறிந்துகொள்வர்.<br><br>ஒலிப்பகுதியைக் கவனமாகக் கேட்டுக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர். சூழலுக்கேற்ப உணர்வுகளையும் கருத்துகளையும் சிந்தனைகளையும் தக்க வகையில் வெளிப்படுத்துவர்.<br><br><u>மதிப்பீடு:</u><br><br>உறவு மின்னஞ்சல் – 20 மதிப்பெண்கள்</td></tr>
<tr><td>2</td><td><u>படித்தல்:</u><br><br>இயற்கை அழகைக் காப்போம், சிங்கப்பூரின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கடல் மாசினைத் தடுப்போம், மன்னர்களும் மக்கள் நலனும், மன்னர்களின் போர் நெறிமுறைகள், தமிழ் வளர்த்த அரசர்கள் ஆகிய தலைப்புகளில் 2A தொகுதி 3 மற்றும் 4இல் அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br><u>எழுதுதல்:</u><br><br>சமூகத் தோட்டம் அமைத்தல்பற்றிய அலுவல் சார்ந்த மின்னஞ்சலும், நோய்க்கிருமிப் பரவல்</td><td><u>நோக்கங்கள்:</u><br><br>முக்கியச் சொற்கள், சொற்றொடர்கள், தலைப்புகள் முதலியவற்றைக் கொண்டு பனுவலின் சாரத்தைப் பெறுவர். லகர, ளகர, ழகர வேறுபாட்டை உணர்ந்து முறையாக அவ்வெழுத்துகளை உச்சரிப்பர். பனுவலில் மையக்கருத்தைக் கண்டறிந்து படிப்பர்.<br><br>எழுதுவதற்குரிய நோக்கமறிந்து பொருத்தமான கருத்துகளைத் தெளிவாக எழுதுவர்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான சுற்றறிக்கையையும் வடிவமைத்து எழுதுவர்.<br><br>**<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br><br>இது முடிவன்று, இதுவே தொடக்கம்!, கவரி வீசிய காவலன் என்ற நோக்கல் கருத்தறிதலைப் பார்ப்பர்.<br>**<u>இலக்கணம்:</u>**<br><br>- உடன்பாட்டு, எதிர்மறை வினைமுற்று<br>- பெயரெச்சம், வினையெச்சம்<br>- தெரிநிலை, குறிப்பு வினைமுற்று<br>- குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம்<br>**<u>இலக்கியம்:</u>**<br><br>கவிதையைப்பற்றியும், மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரண்டைப்பற்றியும் அறிவர்.<br><br>மரபுத்தொடர்கள், இணைமொழிகள்<br>பழமொழி, திருக்குறள் | கொடுக்கப்பட்டிருக்கும் சூழலுக்கேற்ப எழுதுவர்.<br><br>ஒளிக்காட்சியைக் கவனமாகப் பார்த்துக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர்.<br><br>**<u>மதிப்பீடு:</u>**<br><br>மொழிக்கூறுகள் – தாள் 2<br>கூறுகள் – 40 மதிப்பெண்கள். |